IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.7

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.கிருஷ்ணன் |
| FATHER NAME | - | திரு.முனுசாமி |
| VILLAGE | - | கீழ்முட்டுகூர்,கே.வி.குப்பம் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | கூலி |
| AGE | - | 89 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.08.2025.

எதிரிகள்1,3,4,7 ஆஜர். 2,5,6 ஆஜர் இல்லை ம னு ஏற்பு.

<u>முதல் விசாரணை</u>

நான் கே.வி.குப்பம் கீழ்முட்டுகூர் , எல்.என் . புரத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாத எதிரிகள் மோகன்ராஜ்,. சரண்ராஜ், காந்தி ஆகியவர்களை தெரியாது. பார்த்தால் தெரியும். எதிரிகள் நாங்கள் ஒரே ஊர் காரர்கள். வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. வழக்கில் இறந்து போன கிருஷ்ணனை தெரியும். அவரது மனைவி சின்னம்மாளை தெரியும். வேறோன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

கடந்த 10.06.2020 அன்று சுமார் மாலை 3.45 மணிக்கு எல்.என்.புரம் கிராமம் கிருஷ்ணன் வீட்டின் அருகே கிருஷ்ணன் கட்டியிருந்த பம்ப்

செட்டு சுவிட்ச் போர்டை கடப்பாறையால் தாமோதரன் மற்றும் அவரது 3 பிள்ளைகள் உடைத்துவிட்டு ஆளுக்கொரு கம்பினை கையில் வைத்துக் கொண்டு கிருஷ்ணனையும் , சின்னம்மாளையும் அசிங்கமாக திட்டி இதோடு ஒழிந்து போனால் தான் நாங்கள் நிம்மதியாக இருக்க முடியும் என்று கூறி இருவரையும் 7 எதிரிகளும் சரமாரியாக கை, கால்கள் மற்றும் தலையில் கொம்பால் அடித்தார்கள் என்றும் உதவ போன என்னையும், ரேகா மற்றும் அண்ணாதுரையையும் கொம்புகளை வைத்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியதால் கிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றும் சின்னம்மாளுக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு அனுகூலம் பெற்றுக் கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

19.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**